


**11. 12. 2025**

**தலைப்புச் செய்திகள்**

1. மாநிலங்களவையில் வந்தேமாதரம் பாடலின் 150ஆவது ஆண்டை ஒட்டிய விவாதத்தில் மத்திய அமைச்சர் திரு.ஜே.பி. நட்டா இன்று பதில் அளித்து பேசினார்.

2. பசுமை ஹைட்ரஜன் இயக்கம் வெற்றிகரமாக முன்னெடுத்து செல்லப்படுவதாக மத்திய அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்துள்ளார்.

3. மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் 144ஆவது பிறந்த தினத்தை ஒட்டி தலைவர்கள் அவருக்கு புகழஞ்சலி செலுத்தினர்.

4. தமிழ்நாட்டில் அனைத்து மாவட்டங்களிலும் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் முதல்நிலை சரிபார்ப்பு பணிகள் இன்று தொடங்கியுள்ளன.

5. இந்திய – தென்னாப்பிரிக்க அணிகளுக்கு இடையிலான இரண்டாவது 20-20 கிரிக்கெட் போட்டி சண்டிகரில் இன்று இரவு நடைபெறுகிறது.

**இனி விரிவான செய்திகள்**

************

**ஜே.பி. நட்டா**

மாநிலங்களவையில் வந்தேமாதரம் பாடலின் 150ஆவது ஆண்டை ஒட்டிய விவாதத்தில் மத்திய அமைச்சர் திரு.ஜே.பி. நட்டா இன்று பதில் அளித்து பேசுகையில் நாட்டின் கலாச்சாரத்தோடு இணைய இப்பாடல் வாய்ப்பை ஏற்படுத்தி கொடுத்ததாக குறிப்பிட்டார்.

இப்பாடல் அனைவருக்கும் உத்வேகமாக உள்ளதாக கூறிய திரு.நட்டா ஒற்றுமையுடன் நாட்டை முன்னெடுத்து செல்வதாகவும் எடுத்துரைத்தார்.

பல்வேறு வரலாற்று சம்பங்களை இப்பாடல் பறைசாற்றுவதாகவும் அமைச்சர் கூறினார்.

முன்னதாக இதுதொடர்பான விவாதத்தை மத்திய அமைச்சர் திரு.அமித்ஷா நேற்று மாநிலங்களவையில் துவக்கிவைத்தார்.

************

**பிரதமர் கூட்டம்**

தேசிய ஜனநாயக கூட்டணி கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு பிரதமர் திரு.நரேந்திரமோடி இன்று இரவு சிறப்பு விருந்தளிக்க உள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

நாடாளுமன்ற குளிர்கால கூட்டத்தொடர் நடைபெற்று வரும் நிலையில், கூட்டணி கட்சிகள் இடையே வெளிப்படையான ஆக்கப்பூர்வமான கருத்துக்கள் பரிவர்த்தனைக்காக இக்கூட்டம் நடைபெறுவதாக தெரிகிறது.

இந்த விருந்து நிகழ்ச்சியில் மூத்த அமைச்சர்கள் அவைத்தலைவர்கள், கூட்டணி கட்சிகளின் அனைத்து உறுப்பினர்களும் பங்கேற்று தேசிய ஜனநாயக கூட்டணியின் தொலைநோக்கு பார்வை, குளிர்கால கூட்டத்தொடரில் அரசின் அணுகுமுறை, நாடாளுமன்ற நிலைப்பாடுகள் குறித்து விவாதிப்பார்கள் என தெரிகிறது.

தமிழ்நாடு மேற்குவங்கம் அஸ்ஸாம் மாநிலங்களில் வரும் சட்டப்பேரவை தேர்தல்களில் மேற்கொள்ள வேண்டிய நிலைப்பாடுகள் குறித்து கூட்டணி கட்சி தலைவர்களின் கருத்துக்கள் கேட்டறியப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

************

**பிரதமர்**

அறிவுதிறன், செயல்பாடு, கட்டுப்பாடு ஆகிய மூன்றும் தேசத்தின் வலிமைமிகு தூண்களாக திகழ்கிறது என்று பிரதமர் திரு.நரேந்திரமோடி தெரிவித்துள்ளர்.

தூர்தர்ஷன் சார்ந்த வீடியோவை தமது வலைதளத்தில் பகிர்ந்துள்ள பிரதமர் சமஸ்கிருத ஸ்லோகம் மூலம் இந்த மூன்று அம்சங்களையும் எடுத்துரைத்தார்.

************

**யுனஸ்கோ**

தீபாவளி பண்டிகை யுனஸ்கோவின் கலாச்சார பாரம்பரிய பட்டியலில் இணைந்துள்ளது தேசத்தின் பெருமைமிகு தருணம் என்று மாநிலங்களவை தலைவர் திரு.சி.பி.ராதாகிருஷ்ணன் அவையில் தெரிவித்தார்.

நாட்டின் வளமான கலாச்சார மரபுகளை பாதுகாத்து முன்னெடுத்து செல்ல இது வழிகோலுவதோடு மக்களுக்கு உத்வேகமாகவும் இருக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதனிடையே கென்யாவில் அமைந்துள்ள ஸ்ரீராமர் கோவிலில் தீபாவளி பண்டிகை இணைக்கப்பட்டதன் கொண்டாட்டங்களில், மத்திய வெளியுறவு இணை அமைச்சர் திரு.கீர்த்தி வர்த்தன் சிங் பங்கேற்றார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய அமைச்சர், பாரத நாட்டின் கலாச்சாரங்களுக்கு உலக அளவில் கிடைக்கும் அங்கீகாரத்தை இது பறைசாற்றுவதாக மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்.

************

**பிரல்ஹாத் ஜோஷி**

பிரதமர் திரு.நரேந்திரமோடி தலைமையிலான ஆட்சியின் கீழ் பசுமை ஹைட்ரஜன் இயக்கம் வெற்றிகரமாக முன்னெடுத்து செல்லப்படுவதாக மத்திய அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற வளாகத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், பசுமை ஹைட்ரஜன் உற்பத்தி, தேசிய பசுமை ஹைட்ரஜன் இயக்கம் உள்ளிட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதை சுட்டிக்காட்டினார்.

உற்பத்தியுடன் கூடிய ஊக்கத்தொகை திட்டத்திற்கு 24 ஆயிரம் கோடி ரூபாய் அனுமதிக்கப்பட்டிருப்பதையும் அமைச்சர் எடுத்துரைத்தார்.

முன்னதாக அமைச்சர், பசுமை ஹைட்ரஜன் ஆற்றலுடன் கூடிய வாகனத்தில் நாடாளுமன்றத்திற்கு வருகை தந்தார்.

************

**ஹர்தீப்சிங் பூரி**

நாட்டின் எரிசக்தி நுகர்வு வேகமாக அதிகரித்து வருவதாக பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சர் திரு.ஹர்தீப்சிங் பூரி தெரிவித்துள்ளார்.

மக்களவையில் துணை கேள்விகளுக்கு இன்று பதில் அளித்த அவர், சர்வதேச எரிசக்தி முகமையின் கணிப்புபடி அடுத்த 20 ஆண்டுகளில் உலகளாவிய எரிசக்தி தேவையில் 35 சதவிகிதத்தை இந்தியா பூர்த்தி செய்யும் என்று குறிப்பிடப்பட்டுள்ளதை சுட்டிக்காட்டினார்.

ஆண்டுதோறும், 150 பில்லியன் டாலர் எரிசக்தி இறக்குமதி செய்யப்படுவதாக அமைச்சர் எடுத்துரைத்தார்.

************

**சந்திரசேகர் பெம்மசானி**

மின்னனு முகவரி முறை குறித்து அரசு செயலாற்றி வருவதாக மத்திய தொலைதொடர்புத்துறை இணை அமைச்சர் திரு.சந்திரசேகர் பெம்மசானி தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் துணை கேள்விகளுக்கு இன்று பதில் அளித்த அவர், இந்த ஒருங்கிணைந்த முறையின் மூலம், டிஜிட்டலில் தங்களது முகவரியை ஒருவர் பதிவு செய்து கொள்ள முடியும் என்றார்.

இந்த முகவரி தனித்துவம் வாய்ந்ததாக இருக்கும் என்றும், இதனை பயன்படுத்துவோர் மட்டுமே இதனை கையாள முடியும் என்றும் குறிப்பிட்டார்.

எதிர்காலத்தை முன்னிட்டு மேற்கொள்ளப்படும் இந்த உத்தேச நடைமுறை, வருவாய் துறைக்கு அனுப்பபட்டுள்ளதாகவும் அனுமதி கிடைத்த பின்னர் நாடுமுழுவதும இது செயல்படுத்துப்படும் என்றும் குறிப்பிட்டார்.

************

**இண்டிகோ**

இண்டிகோ விமானங்களின் செயல்பாடை மத்திய சிவில் விமான போக்குவரத்து அமைச்சகத்தின் கட்டுப்பாட்டு அறையிலிருந்து அமைச்சர் திரு.ராம்மோகன் நாயுடு இன்று ஆய்வு மேற்கொண்டார்.

பயணிகளின் குறைகளை, களையும் நோக்கத்துடன் விமானங்கள் இயக்கப்படுவதை மத்திய அரசு கண்காணித்து வருவதாகவும், கட்டுப்பாட்டு அறை குழுவினர் முனைப்புடன் செயலாற்றிவருவதாகவும் அவர் கூறினார்.

************

**பாரதியார்**

மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் 144ஆவது பிறந்த நாள் இன்று கொண்டாடப்படுவதை ஒட்டி குடியரசு துணை தலைவர் திரு.சி.பி.ராதாகிருஷ்ணன், பிரதமர் திரு.நரேந்திரமோடி உள்ளிட்டோர் அன்னாருக்கு மரியாதை செலுத்தியுள்ளனர்.

மகாகவியின் புகைப்படத்திற்கு இன்று மலர் தூவி மரியாதை செலுத்திய திரு.சி.பி.ராதாகிருஷ்ணன் தேசப்பற்று, சமத்துவம், மனித மாண்பை உள்ளடக்கிய பாரதியின் எழுச்சிமிகு பாடல்கள் எதிர்கால சந்ததியினருக்கு தொடர்ந்து உத்வேகம் அளிக்கும் என்று கூறியுள்ளார்.

**பிரதமர் வெளியிட்டுள்ள செய்தியில்** பாரதியாரின் பாடல்கள் மக்கள் மனதில் துணிச்சலை ஏற்படுத்தியதாகவும், தமிழ் இலக்கியத்தில் பாரதியின் பங்கு மகத்தானது என்றும் குறிப்பிட்டார்.

மத்திய இணை அமைச்சர் டாக்டர் எல்.முருகன் தமது சமூக வலைதள பதிவில், வீரம் செறிந்த கருத்துக்கள் மூலம் இளையோரிடையே விடுதலை வேட்கையை மேலோங்க செய்தவர் பாரதி என புகழராம் சூட்டியுள்ளார்.

**முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் வெளியிட்ட** செய்தியில் சிந்தனை, சொல், செயல் என அனைத்திலும் புதுமையை புகுத்தியவர் பாரதியார் என கூறியுள்ளார்.

**சென்னை மெரினா** கடற்கரையில் பாரதியாரின் திருவுருவ சிலைக்கு அமைச்சர்கள் திரு.சாமிநாதன், திரு.சேகர்பாபு உள்ளிட்டோர் இன்று மலர்தூவி மரியாதை செலுத்தினர்.

**பாரதியாரின் சொந்த ஊரான தூத்துக்குடி** மாவட்டம் எட்டயபுரத்தில் அமைந்துள்ள நினைவு மணிமண்டபத்தில் உள்ள திருவுருவ சிலைக்கு மாநில அமைச்சர் திருமதி கீதாஜீவன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

************

**முதலமைச்சர் - சுப்ரியா**

காலநிலை மாற்றம் தொடர்பான செயல்பாடுகளில் சிறப்பாக செயல்பட்டமைக்காக ஐ.நாவின் உயரிய விருதை பெற்றுள்ள தமிழக அரசின் கூடுதல் தலைமை செயலாளர் திருமதி சுப்ரியா சாகுவிற்கு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் பாராட்டு தெரிவித்துள்ளார்.

இந்த விருதால் தமிழகம் பெருமை கொள்வதாக முதலமைச்சர் கூறினார்.

ஈர நில பாதுகாப்பு, உள்ளிட்ட சுற்றுசூழல் மேம்பாட்டிற்கான பணிகள் தொடர இவ்விருது ஊக்கமாக அமையும் எனவும் முதலமைச்சர் கூறியுள்ளார்.

************

**முதலமைச்சர்**

தமிழ்நாட்டில் மகளிர் உரிமைதொகை இரண்டாம் கட்டத்தை முதலமைச்சர் சென்னையில் நாளை தொடங்கிவைக்கிறார்.

நாமக்கல் மாவட்டத்தில் 37 ஆயிரத்து 134 மகளிருக்கு இரண்டாம் கட்டமாக இத்தொகை வழங்கப்பட உள்ளதை முன்னிட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி துர்கா மூர்த்தி துறை சார்ந்த அலுவலர்களுடன் ஆலோசனை மேற்கொண்டார்.

************

**வாக்குப்பதிவு இயந்திரங்கள்**

தமிழ்நாட்டில் சட்டப்பேரவை தேர்தலை முன்னிட்டு அனைத்து மாவட்டங்களிலும் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் முதல்நிலை சரிபார்ப்பு பணிகள் இன்று தொடங்கின.

திருச்சி தூத்துக்குடி, நாமக்கல் திருப்பூர் திருநெல்வேலி வேலூர் உள்ளிட்ட மாவட்டங்களில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிபிரதிநிதிகள் முன்னிலையில் சரிபார்ப்பு பணிகளை ஆட்சியர்கள் மேற்கொண்டனர்.

இதனிடையே வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர கணக்கெடுப்பு படிவங்களை சமர்ப்பிக்க இன்று கடைசி நாளாகும்.

நீடாமங்கலத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்த பணியினை திருவாரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.மோகன சுந்தரம் இன்று ஆய்வு செய்து பணிகளை இன்றுமாலைக்குள் விரைந்து முடிக்க அறிவுறுத்தினார்.

**வாய்ஸ்**

வரைவு வாக்காளர் பட்டியல் வரும் 16ஆம் தேதி வெளியிடப்படுகிறது.

************

**இஸ்ரோ**

தூத்துக்குடி மாவட்டம் குலசேகரபட்டினம் ஏவுதளத்திலிருந்து இன்னும் இரண்டு ஆண்டுகளில் விண்ணில் ராக்கெட் ஏவப்படும் என்று இஸ்ரோ தலைவர் திரு.நாராயணன் தெரிவித்துள்ளார்.

நெல்லையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், ககன்யான் திட்டத்திற்கான பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருவதாகவும், 2027-ம் ஆண்டு இந்த விண்கலம் விண்ணிற்கு அனுப்ப இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

************

**விழுப்புரம்**

விழுப்புரம் மாவட்டத்தில் பிரதமரின் ஊரக குடியிருப்பு திட்டத்தின் கீழ் 725 வீடு பணிகள் நடைபெற்று வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**வாய்ஸ்**

************

**வேலூர்**

வேலூர் மாவட்டத்தில் தொலைதூர மக்களின் வசதிக்காக வரும் 17ஆம் தேதிமுதல் பாஸ்போர்ட் சேவா வாகனம் ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் நிறுத்தப்பட உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**வாய்ஸ்**

************

**சென்னை சர்வதேச திரைப்பட விழா**

23ஆவது சென்னை சர்வதேச திரைப்பட விழா இன்று தொடங்கி வரும் 18ஆம் தேதிவரை நடைபெறுகிறது.

மாநில திரைப்பட தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் திரு.சாமிநாதன் தொடக்க நிகழ்ச்சியில் பங்கேற்கிறார்.

தமிழ் சினிமா பிரிவில் 12 தேர்வு செய்யப்பட்ட திரைப்படங்கள் இதில் திரையிடப்பட உள்ளன.

************

**கிரிக்கெட்**

இந்திய – தென்னாப்பிரிக்க அணிகளுக்கு இடையிலான இரண்டாவது 20-20 கிரிக்கெட் போட்டி சண்டிகரில் இன்று இரவு 7 மணிக்கு நடைபெறுகிறது.

5 போட்டிகள் கொண்ட இத்தொடரில் இந்தியா தற்போது 1-0 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது.

************

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது**

************